1981 ஏப்ரல் 1]

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, மத்திய அரசு பாலியஸ்டர் நாரிழையினைத் தொழிற்சாலைக்கு அனுமதி இங்கு இல்லை என்று சொல்கிறார்கள். அதே போல் எச். எம். டி. நிறுவனத்தின் பிரிவை தமிழ் நாட்டில் உருவாக்க அனுமதி இல்லை என்று சொல்கிறார்கள். மத்திய அரசு தமிழகத்திற்கு மறுப்பதற்குக் காரணம் இங்கே சீதோஷ்ண நிலை இல்லையா? இல்லை தொழில் கூடங்கள் அமைப்பதற்குள்ள மூலப் பொருள்கள் இல்லையா எந்த அடிப்படையில் மத்திய அரசு இவைகளையெல்லாம் மறுக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : எல்லா சீதோஷ்ண நிலையும் தமிழ்நாட்டில் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் ஏனோ மறுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் மீதும், பாராளுமன்ற உறுப்பினர் திரு. அன்பரசு மீதும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் இங்கே கேட்கக் கூடாது.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, நான் இதைக் கேட்பதற்கு மிகவும வெட்கப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்கப்படுவதை கேட்பானேன் ?

திரு. து. புருஷோத்தமன் : மற்றவர்களுக்கு வெட்கம் வர வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். நான் வேதனைப் படுகிறேன். ஜீரோ ஹவரில் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். ஒரு குறுகிய கால வினாவிற்கு, கொடுத்து ஒன்பது மாதங்களாகி விட்டன. நாங்கள் தங்களிடம் தான் கேட்கவேண்டும். கேட்கிறேன். ஒரு ஷார்ட் நோட்டீஸ் க்வஸ்டினுக்கு ஒன்பது மாதங்களாகும் என்றால் நிச்சயமாக நீங்கள் எங்களைப் போல.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் உங்களைப் போல் தான் இருக்கிறேன். நன்றி. அரசாங்கத்திடம் சொல்லியிருக்கிறோம், விரைவில் விடைகள் வரும்.

திரு. என். வி. என். சோமு : குமாரபாளையம் எஸ். எஸ். எம்.-ல் 300 தொழிலாளர்கள்.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பலவிடங்களில் வேலை நிறுத்தங்கள் நடைபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் தொழிற் சங்கத் தலைவர். அவருக்குத் தெரியாதது என்ன இருக்கிறது.

திரு. அன்பில் தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, 28 ஆம் தேதி குளித்தலையில், நங்கவரம் பகுதியிலே நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானமும், ஒத்தி வைப்புத் தீர்மானமும் கொடுத்திருந்தேன்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரவர்களுக்கு அவர்கள் பிரச்சினை முக்கியமானது. ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் எடுத்துக்கொள்ள முடியும். இன்றைய தினம் மதுராந்தகம் பிரச்சினை வருகிறது. இந்த பிரச்சினைப் பற்றி மூன்று, நான்கு நாட்களாக உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் கேட்டு, இன்றைக்குத் தான் பதில் வந்திருக்கிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதுபற்றி ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்சினை னையை நான் எடுக்கிறதா, இல்லையா என்று என் ஆய்விலே இருக்கிறது. அவையிலே எடுத்த பிறகு தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு பேசலாம். ஒத்திவைப்புத் தீர்மானத்தை இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறேன். உரிமை மீறல் பிரச்சினையை பரிசீலனை செய்துதான் முடிவு செய்ய வேண்டும். அதுவரையில் அதுபற்றி பேசுவதற்கு அனுமதி அளிக்க இயலாது.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சி உறுப்பினராக மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் மீது மாசு கற்பிக்கும் அளவிற்கு, களங்கம் கற்பிக்கும் அளவிற்கு பத்திரிக்கைகளில் செய்தி வந்திருக்கிறது. வெளியே விளம்பரம் செய்யப்பட்டும் இருக்கிறது.

1981 எப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொருவர் ஒவ்வொருவரைப் பற்றி வெளியே பேசுகிறார்கள். அதற்கெல்லாம் கோர்ட் இருக்கிறது. வெளியே பேசக் கூடிய காரியங்களுக்கு இங்கே அனுமதி தர இயலாது.

ஆ. அரசுப் பேருந்துகளில் உறுப்பினர்களுக்கு அளிக்கப் பெற்றுள்ள சலுகை.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, பேரவை உறுப்பினர்களுடைய பஸ் பாஸ் விஷயம். பேரவை உறுப்பினர்களுக்கும், டிப்பார்ட்மென்ட்க்கும் இதில் ஒரு குழப்பம் இருக்கிறது. அன்றாடம் அந்த ஸ்டாப்க்கும் பேரவை உறுப்பினர்களுக்கும் பிரிக்ஷன் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதால் இது அவசரமாக தலையிடப்பட வேண்டிய விஷயம். நேற்று கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் மனைவியோடு travel செய்யும்போது கட்டணம் வசூல் செய்ததாகச் சொன்னார்கள். திரு. பாபு ஜனார்த்தனம் அவர்கள் சென்றிருக்கிறார்கள். பாஸில் மனைவியோடு போகலாம் என்பது கண்செப்ட், ஐடன்ட்டிட்டி கார்ட்டை வைத்துக்கொண்டு பஸ்ஸில் போயிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அவர்களிடம் கட்டணம் வசூலித்திருக்கிறார்கள். ஒரு எம்.எல்.ஏ. என்று தெரிந்த பிறகும் கட்டணம் வசூல் செய்வது என்பது சரியல்ல. அதனால் பிரிக்ஷன் வருகிறது. ஆகவே டிப்பார்ட்மென்ட்டுக்கும் ஒரு குழப்பம் இருக்கிறது. எனவே போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி கிளியர் செய்து விடவேண்டும். டிரான்ஸ்போர்ட் டிப்பார்ட்மென்டார் புரிந்து கொள்ளும் வகையில் க்ளியர் செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதுபற்றி தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் மனைவியை உடன் அழைத்துக் கொண்டு செல்லலாம். சட்டமன்ற உறுப்பினர்கள் பயணம் செய்யும்போது மட்டும்தான் அவர்களை அழைத்துச் செல்ல முடியும். சட்டமன்ற உறுப்பினர்கள் பயணம் செய்யாதபோது தனியாக அவர்களுடைய மனைவியாக்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது என்று நான் தெளிவாக சொல்லியிருக்கிறேன். எனவே சட்டமன்ற உறுப்பினர்கள் பேருந்துகளில் பயணம் செய்கிறபோது தங்களுடைய மனைவியை உடன் அழைத்துக் கொண்டு செல்லலாம். இங்கிருக்கிற பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் விதிவிலாகு அளித்து ஒருவரை துணைக்காக யாரையாவது அழைத்துக் கொண்டு செல்லலாம், பெண்களையோ அல்லது சகோதரர்களையோ சொந்தகாரர்களையோ அழைத்துச் செல்லலாம் என்று சொல்லியிருக்கிறோம். எனவே ஆண்களைப் பொறுத்தவரையில் கட்டாயமாக மனைவியோடு சேர்ந்து பயணம் செய்யலாம். சட்டமன்ற உறுப்பினர்